# February 15, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1.ரூ.10,000 கோடி மூலதனத்துடன் கூடிய 'புத்தாக்க இந்தியா' இரண்டாம் கட்ட நிதி ஆதரவு திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தில்லியில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(i) முன்னதாக, தில்லியில் தனது புதிய அலுவலகமான 'சேவா தீர்த்' வளாகத்தை திறந்து வைத்தபோது இந்த மூலதன நிதிக்கான கோப்பில் பிரதமர் மோடி கையொப்பமிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ii) தொழில் முனை வோருக்கு ஆரம்ப மூலதன நிதிக்கான உதவியை அளித்து, நீண்டகால மூலதன கலாசாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் கடந்த 2016-ஆம் ஆண்டில் புத்தாக்க இந்தியா திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்தது. இத் திட்டம் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக இந்தத் திட்டத்துக்கு ரூ.10,000 கோடி மூலதன நிதியை ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

(iii) மத்திய தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகம் ஊக்குவிப்பு (டிபி ஐஐடி துறை சார்பில் இதுவரை 2 லட்சம் நிறுவனங்கள் புத்தாக்க நிறுவனங்களாக (ஸ்டார்ட்அப்) அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் புத்தாக்க இந்தியா செயல் திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகையைப் பெறுவதற்கு தகுதி டையவையாகும்.

(iv) பன்முக ரயில் வழித்தடத் திட்டங்கள்:

- மூன்று பன்முக ரயில் வழித்தடத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்தத் திட்டங்களைச் செயல் படுத்த ரயில்வே அமைச்சகத்துக்கு ரூ.18,509 கோடி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தில் மகாராஷ்டிரத்தின் கசாரா - மன்மட், தில்லி- ஹரியாணாவின் அம்பாலா, கர்நாடகத்தின் பெல்லாரி ஹொசாபேட் வரையிலான மூன்றாவது மற்றும் நான்காவது ரயில் வழித்தடங்கள் அமைக்கப்படுவது அடங்கும்.
- பன்முக போக்குவரத்து தொடர்பு மற்றும் சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்தப் பன்முக ரயில் வழித்தட திட்டத்துக்கு முன்மொழியப்பட்டது. பிரதமரின் உத்வேக (கதி சக்தி) தேசிய முதல் முதன்மைத் திட்டத்தின் (மாஸ்டர் பிளான்) கீழ் இந்தத் திட்டத்தை மேம்படுத்த திட்டமிடப்பட்டது. இந்தத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை தற்போது ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம் பயணிகள், சரக்குகள் மற்றும் சேவைகளின் தடையற்ற இயக்கம் உறுதி செய்யப்படும்.
- இந்த மூன்று பன்முக ரயில் வழித்தடத் திட்டங்கள் தில்லி, ஹரியாணா, மகாராஷ்டிரம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் தற்போதுள்ள ரயில் வழித்தடத்தை சுமார் 389 கி.மீ. தொலைவுக்கு கூடுதலாக்கும். அதன்மூலம், சுமார் 3,902 கிராமங்களுக்கான போக்குவரத்து தொடர்பு விரிவுபடுத்தப்படுவதோடு, ஏறத்தாழ 97 லட்சம் மக்கள் பயன்பெறுவர்.
- அதுமட்டுமன்றி, ஸ்ரீநகரின் கத்ராவில் உள்ள ஸ்ரீ மாதா வைஷ்ணவ தேவி ஆலயம், பெல்லாரி கோட்டை, கர்நாடகத்தின் தரோஜி சோம்பல் கரடி சரணாலயம், துங்கபத்ரா அணை உள்பட நாடு முழுவதும் உள்ள பல்வேறு முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கான ரயில் வழித்தட இணைப்பையும் இந்தத் திட்டம் மேம்படுத்தும்.

(v) ரூ.1 லட்சம் கோடி நகர்ப்புற சவால் நிதி :-

- ரூ. 1 லட்சம் கோடி மத்திய அரசின் உதவியுடன் கூடிய நகர்ப்புற சவால் நிதி திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.
- இந்தத் திட்டத்தின் கீழ், குறைந்தபட்சம் 50 சதவீத நிதி சந்தையில் இருந்து திரட்டப்பட்டால், திட்டச் செலவில் 25 சதவீதத்தை மத்திய அரசு ஈடுசெய்யும். இத் திட்டம், அடுத்த 5 ஆண்டுகளில் நகர்ப்புற மேம்பாட்டுத் துறையில் ஒட்டுமொத்தமாக
- ரூ.4 லட்சம் கோடி முதலீட்டுக்கு வழிவகுப்பதோடு, சந்தை நிதி, தனியார் பங்கேற்புடன் குடிமக்களை

மையமாகக்கொண்ட சீர்திருத்தங்களுக்கும் வழிவகுக்கும்.

(vi) நீருக்கு அடியில் சாலை, ரயில் இரட்டை சுரங்கப் பாதை :-

- அஸ்ஸாம் மாநிலத்தில் ரூ.18,622 கோடி மூலதன செலவில் மேற்கொள்ளப்படவிருக்கும் நாட்டின் முதல் நீருக்கு அடியிலான 34 கி.மீ. தொலைவிலான சாலை மற்றும் ரயில் வழித்தட இரட்டை சுரங்கப் பாதை திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவின் ஹூக்ளி ஆற்றுக்கு அடியில் நாட்டின் முதல் சாலைப் போக்குவரத்துக்கான சுரங்கப் பாதை கட்டப்பட்டது. அதுபோல, குஜராத்தின் அகமதாபாத் - மகாராஷ்டிரத்தின் மும்பைக்கு இடையே புல்லட் ரயில் திட்டத்துக்காக நாட்டின் முதல் கடலுக்கு அடியிலான ரயில் சுரங்கப் பாதை அமைக்கப்பட்டு வருகிறது.
- இந்நிலையில், அஸ்ஸாம் மாநிலத்தில் பிரம்மபுத்ரா நதிக்கு அடியில் கோப்பூர் (என்.ஹெச்.14) முதல் நுமாலிகர் வரையில் நான்கு வழித் தடங்களுடன் கூடிய நாட்டின் முதல் மற்றும் உலக அளவில் இரண்டாவது சாலைப் போக்குவரத்து மற்றும் ரயில் போக்குவரத்துக்கான இரட்டை சுரங்கப் பாதை அமைக்கப்பட உள்ளது. இந்தத் திட்டம் அஸ்ஸாம், அருணாசல பிரதேசம், நாகாலாந்து மற்றும் பிற வடகிழக்கு மாநிலங்களுக்கு குறிப்பிடத்தக்க பலனை அளிக்கும். சரக்குப் போக்குவரத்து செலவும் வெகுவாகக் குறையும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. வங்கதேசத்தின் புதிய பிரதமராக வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி) தலைவர் தாரிக் ரஹ்மான் பதவியேற்கவுள்ள நிலையில், அவரது ஆட்சியில் இந்தியா உடனான உறவுகள் சீரமைக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

(i) வங்கதேசத்தில் நடைபெற்ற 13-ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் மறைந்த முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் தலைமையிலான வங்கதேச தேசியவாத கட்சி மூன்றில் இரு பங்குக்கும் அதிக பெரும்பான்மையுடன் (297-இல் 209 இடங்கள்) வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

(ii) வங்கதேச அரசிதழில் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட நிலையில், புதிய பிரதமராக தாரிக் ரஹ்மான் பிப்.16 அல்லது 17-இல் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. 53 ஆப்பிரிக்க நாடுகளின் இறக்குமதி பொருள்களுக்கு வரும் மே மாதம் முதல் சீனா முழு வரிவிலக்கு அளிக்கவுள்ளது.

4. அல்பேனியா நாட்டின் அமைச்சரவையில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட மெய்நிகர் அமைச்சருக்குத் தனது முகத் தோற்றத்தையும், குரலையும் அனுமதியின்றி பயன்படுத்தியதாக அந்நாட்டு அரசு மீது பிரபல நடிகை அனிலா பிஷா வழக்குத் தொடர்ந்துள்ளார்.

(i) கடந்த செப்டம்பர் மாதம், பிரதமர் எடிராமா தனது 4-ஆவது பதவிக்காலத்தைத் தொடங்கியபோது, அரசு ஒப்பந்தங்களில் நடைபெறும் ஊழல்களைத் தடுப்பதற்காக, சூரியன் என பொருள்படும் 'டியெல்லா' என்ற பெயரில் ஒரு மெய்நிகர் அமைச்சரை அறிமுகம் செய்தார்.

(ii) இந்த 'டியெல்லா' அமைச்சரின் தோற்றமும், பேசும் குரலும் அப்படியே நடிகை அனிலா பிஷாவைப் போலவே இருப்பது

(iii) தனது தனி மனித உரிமையை மீறியதற்காகவும், நற்பெயருக்குக் களங்கம் விளைவித்ததற்காகவும் அல்பேனியா அரசிடம் இருந்து அனிலா பிஷா 10 லட்சம் யூரோ (இந்திய மதிப்பில் சுமார் ரூ.10.7 கோடி) இழப்பீடு கோரி வழக்குத் தொடர்ந்துள்ளார்.

(iv) இருப்பினும், இந்தக் குற்றச் சாட்டுகளை அல்பேனியா அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது. இது தேவையற்ற ஒரு வழக்கு என்றும், இதை நீதிமன்றத்தில் சட்டப்படி எதிர்கொள்வோம் என்றும் அரசு செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். இந்த வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பளிக்கவுள்ளது.

5.தொலைத்தொடர்பு, செமிகண்டக்டர் மற்றும் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) போன்ற நவீன தொழில்நுட்பத் துறைகளில், நம்பகமான மற்றும் பாதுகாப்பான கட்டமைப்பை உருவாக்குவதற்காக 'டிரஸ்டட் டெக் அலையன்ஸ்' எனும் புதிய சர்வதேச கூட்டமைப்புடுள்ளது. உருவாக்கப்பட்

(i) மைக்ரோசாப்ட், கூகுள் கிளவுட், எரிக்சன், நோக்கியா, ஆன்த்ரோபிக் உள்ளிட்ட உலகின் முன்னணி 15 நிறுவனங்கள் இணைந்துள்ள இந்தக் கூட்டமைப்பில், இந்தியாவின் ஜியோ பிளாட்ஃபார்ம்ஸ் நிறுவனமும் ஓர் அங்கமாகியுள்ளது. வெளிப்படைத்தன்மை, தனி நபர் தரவு பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்ய 5 அடிப்படை விதிகளைப் பின்பற்ற, இந்தக் கூட்டமைப்பில் இணைந்த நிறுவனங்கள் ஒப்புக்கொண்டுள்ளன.

(ii) அதாவது இந்தப் புதிய ஒத்துழைப்பு, கிளவுட் சேவைகள் முதல் மென்பொருள்கள் வரை அனைத்திலும் பயனர்களின் நம்பிக்கையைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உலக அளவில் எண்ம பொருளாதாரத்தை பாதுகாப்பான முறையில் வளர்க்க ஊக்குவிக்கிறது.

6. பஹ்ரைன் தலைநகர் மனாமாவில் நடை பெறும் பிட பிள்யு எஃப் உலக பாரா பாட்மின்டன் சாம்பியன் ஷிப்பில் இந்தியாவின் பிரமோத் பகத் எஸ் எல் 3 பிரிவில் தங்கம் வென்று 6-ஆவது முறையாக உலக சாம்பியன் பட்டம் வென்றார்.

7.பருவநிலை மாற்றத்தால் நிதி ஏற்படும் பாதிப்புகளை கட்டுப்படுத்துவதற்கான ஒதுக்கீடு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 5.6 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். ஜெர்மனி நாட்டின் மியூனிக் நகரில் நடைபெறும் பாதுகாப்பு மாநாட்டையொட்டி நடைபெற்ற கருத்தரங்கைத் தொடங்கிவைத்து நிர்மலா சீதாராமன் பேசியதாவது :-

(i) 6 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் பருவநிலை பாதிப்புகளை கட்டுப்படுத்துவதற்கான நிதி ஜிடிபியில் 3.7 சதவீதமாக இருந்தது. தற்போது இது 5.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. பருவநிலை நடவடிக்கைகளுக்கான முதலீடுகளை மத்திய அரசு கடந்த சில ஆண்டுகளாக உயர்த்தியதே இதற்கு காரணம்.

(ii) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர்புடைய தேசிய இலக்குகளில் மூன்றில் இரண்டு பங்கு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டதைவிட 4 ஆண்டுகளுக்கு முன்பாகவே நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்துறையில் முதலீடுகள் மேலும் அதிகரிக்கப்படும். கரியமில வாயு சேமிப்பு வியூகங்களுக்கு 2026-27 நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வியூகங்கள் நாடு முழுவதும் அமல்படுத்தப்படும்.

(iii) சுற்றுச்சூழல் மாசை குறைவாக ஏற்படுத்துகிற நாடுகள் பருவ நிலை நடவடிக்கைகளுக்கு குறைவான நிதியையே வழங்க வேண்டும். அனைத்து நாடுகளும் இதில் ஒரே மாதிரியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற விதியில் மாற்றம் தேவை என்றார்.

8. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தத்தை இந்தியா ஆதரிக்கும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

(i) ஜெர்மனியின் மியூனிக் நகரில் பாதுகாப்பு விவகாரம் தொடர்பான உலக நாடுகளின் மாநாடு நடைபெறுகிறது. இதில் கலந்துகொள்ள சென்றுள்ள ஜெய்சங்கர், மாநாட்டின் இடையே ஜி7 அமைப்பு நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களை சந்தித்து பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

(ii) ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய 5 நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன. அந்நாடுகளுக்கு வீட்டோ உள்ளிட்ட சிறப்பு அதிகாரங்கள் உள்ளன.

(iii) பாதுகாப்பு கவுன்சிலை தற்போதைய உலக சூழலுக்கு ஏற்ப சீர்திருத்தம் செய்ய வேண்டும், அதில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக்க வேண்டும் எனவும் இந்தியா வலியுறுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

9.தேர்தல் அறக்கட்டளைகள் (எலக்டோரல் டிரஸ்ட்) திட்டத்தில் 2024-25 நிதியாண்டில் அரசியல் கட்சிகளுக்கு

ரூ.3,826.35 கோடி நன்கொடை வழங்கப்பட்டுள்ளதாக ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ஏடிஆர்) தெரிவித்தது.

(i) இதில் அதிகபட்சமாக ரூ.3,157.65 கோடி (82.5 சதவீதம்) பாஜகவுக்கு நன்கொடை அளிக்கப்பட்டிருக்கிறது.

(ii) அரசியல் கட்சிகள் பெறும் நன்கொடைகளில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்ய தேர்தல் அறக்கட்டளைகள் திட்டம், 2013-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்படும் அறக்கட்டளைகள் நிறுவனங்களிடம் இருந்து நன்கொடை வசூலித்து அதை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்குகின்றன.

(iii) இதுபோன்ற அறக்கட்டளைகளை நிறுவனங்கள் அமைக்க மத்திய நேரடி வரிகள் வாரியத்திடம் (சிபிடிடி) ஒப்புதல் பெறுவது கட்டாயம்.

(iv) கட்சிகள் பெற்ற நிதி :-

இந்தத் திட்டத் தின்கீழ் தேர்தல் அறக்கட்டளைகள் பெற்ற நன்கொடை, அரசியல் கட்சிகளுக்கு மேற்கொண்ட விநியோகம் உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய அறிக்கையை ஏடிஆர் வெளியிட்டது. அதில் கூறப்பட்டிருப்பதாவது :-

- 2024-25 நிதியாண்டில் தேர்தல் அறக்கட்டளைகளுக்கு நிறுவனங்கள் ரூ.3,826.34 கோடி நன்கொடை வழங்கியுள்ளன.
- கடந்த நிதியாண்டில் இருந்த உபரித் தொகையையும் சேர்த்து ரூ.3,826.35 கோடி நிதியை அங்கீகரிக்கப்பட்ட சுட்சிகளுக்கு தேர்தல் அறக்கட்டளைகள் விநியோகித்துள்ளன.
- அதிகபட்சமாக ரூ.3,157.65 கோடி (82.5 சதவீதம்) நிதியை பாஜக பெற்றுள்ளது. காங்கிரஸ் ரூ.298.77 கோடி (7.81 சதவீதம்), திரிணமூல் காங்கிரஸ் ரூ.102 கோடி (2.67 சதவீதம்) மற்றும் 19 கட்சிகள் ரூ.267.91 கோடியை பெற்றன.

(v) நிறுவனங்களின் பங்களிப்பு :-

- அறக்கட்டளைகளைப் பொறுத்தவரை ப்ரூடெண்ட் அறக்கட்டளை 15 கட்சிகளுக்கு ரூ.2,668.46 கோடியை விநியோகித்துள்ளது. ப்ரொகிரெஸிவ் அறக்கட்டளை 10 கட்சிகளுக்கு ரூ.914.9 கோடியை விநியோகித்துள்ளது.
- ஒட்டுமொத்தமாக 228 பெருநிறுவனங்கள் ரூ.3,636 கோடியும், 99 தனிநபர்கள் ரூ.187.62 கோடியும் அளித்துள்ளனர்.
- அதிகபட்சமாக எலிவேட்டட் அவென்யூ ரியால்டி நிறுவனம் ரூ.500 கோடி நன்கொடை வழங்கியுள்ளது. அடுத்தடுத்த இடங்களில் டாடா சன்ஸ் (ரூ.308.13 கோடி), டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (ரூ.217.62 கோடி), மெகா பொறியியல் உள்கட்டமைப்பு (ரூ.175 கோடி) நிறுவனங்கள் உள்ளன.

(vi) மாநிலங்கள் வாரியாக :-

- மகாராஷ்டிரம் ரூ.1,225.42 கோடி நன்கொடை செலுத்தி முதலிடத்தில் உள்ளது. தெலங்கானா (ரூ.358.25 கோடி), ஹரியாணா (ரூ.212.9 கோடி), மேற்கு வங்கம் (ரூ.203.85 கோடி), குஜராத் (ரூ.200.50 கோடி) அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- சரியான முகவரியின்றி நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூ.1,065.20 கோடி ப்ரூடெண்ட் அறக்கட்டளைக்கு அனுப்பப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

10. இந்திய நிலப்பரப்பில் மண்ணின் ஈரப்பதத்தை ஆய்வு செய்து 12 நாள்களுக்கு ஒரு முறை நிசார் செயற்கைக்கோள் தரவுகளை வெளியிடவுள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தெரிவித்தது.

(i) இஸ்ரோ - நாசா கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான நிசார் கடந்த ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது.

(ii) புவியின் மேற்பரப்பு மாற்றங்கள், பருவநிலை மாற்றங்கள் உள்ளிட்டவை குறித்து இந்த செயற் கைக்கோள் ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

(iii) இதன் செயல்பாடுகள் குறித்து இஸ்ரோ வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'எஸ் பேண்ட் மற்று எல் பேண்ட் ஆகிய இரு அலைவரிசைகளையும் பயன்படுத்தி இந்திய நிலப்பரப்பை துல்லியமாக அளவிட்டு 100 மீட்டர் வரை மண்ணின் ஈரப்பதம் குறித்து 12 நாள்களுக்கு ஒருமுறை இரு தரவுகளை நிசார் வெளியிடவுள்ளது.

(iv) வேளாண்மை, நீர் பராமரிப்பு, பயிர்கள் மற்றும் வறட்சி பாதிப்புகளைக் கண்டறிவதில் மண்ணின் ஈரப்பதம் முக்கியக் காரணியாக விளங்குகிறது.

(v) நிசார் வெளியிடும் தரவுகள் மூலம் நீர்ப்பாசன சமவெளிகள் முதல் வறண்ட-பாலைவன மற்றும் அதிக மழைப்பொழிவு மண்டலங்கள் என இந்திய வேளாண்-பருவ மண்டலங்களை துல்லியமாக மதிப்பிடமுடியும்.

(vi) இது வேளாண் திட்டமிடல் மற்றும் விவசாயிகளுக்குப் பயன்படுவதோடு வறட்சியை எதிர்கொள்வதற்கான செயல்திட்டத்தை தீட்டவும் பயன்படவுள்ளது. இதற்கான தொழில்நுட்பம் இஸ்ரோவின் விண்வெளி செயல்பாடுகள் மையத்தில் வடிவமைக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

11.அஸ்ஸாம் மாநிலம், திப்ரூகர் தேசிய நெடுஞ்சாலையில், அவசர காலங்களின் போது விமானங்கள் தரையிறங்கும் ஓடுபாதை வசதி கட்டமைக்கப்பட்டுள்ளது.

(i) வடகிழக்கு பிராந்தியத்தில் முதல் முறையாக கட்டமைக்கப்பட்டுள்ள இந்த அவசரகால ஓடு பாதையை திறந்து வைப்பதன் அடையாளமாக ராணுவ விமானத்தில் வந்திறங்கினார் பிரதமர் நரேந்திர மோடி.

(ii) நெடுஞ்சாலையில் பிரதமர் விமானம் தரையிறங்கியது, வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக பார்க்கப்படுகிறது.

(iii) திப்ரூகர் மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை எண் 37-இல் மோரன் புறவழிச் சாலையில் சுமார் 4.2 கி.மீ. தொலைவுக்கு நான்குவழி அவசரகால ஓடுபாதை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(iv) ரூ.100 கோடி செலவில் கட்டமைக்கப்பட்டுள்ள இந்தப் பன்முகப் பயன்பாட்டு ஓடுபாதை அவசர காலங்கள் மற்றும் பேரிடர்களின்போது, திப்ரூகர் விமான நிலையத்துக்கு மாற்றாக ராணுவம்-தனியார் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தும் வகையில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

(v) இந்நிலையில், அஸ்ஸாம் மாநிலத்துக்கு பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி, திப்ரூகர் மாவட்டத்தின் சாபுவா விமானப் படை தளத்தை வந்தடைந்தார்.

(vi) இந்திய விமானப் படையின் 'பணிக் குதிரை' என வர்ணிக்கப்படும் ஏஎன்-32 இரட்டை என்ஜின் ஹெலிகாப்டர், ஓடுபாதையில் தனது செயல்திறனை வெளிப்படுத்தியது. அதிநவீன இலகு ரக ஹெலிகாப்டர்களும் துரிதமாக மேலெழும் திறன்களை வெளிப்படுத்தின.

12. குவாஹாட்டியில் ரூ.3,030 கோடி செலவில் பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே கட்டப்பட்ட ஆறு வழிப் பாலத்தை பிரதமர் மோடி திறந்துவைத்தார். 'குமார் பாஸ்கர் வர்மா சேது' எனப் பெயரிடப்பட்ட இப்பாலம், குவாஹாட்டி-வடக்கு குவாஹாட்டியை இணைக்கிறது. இது, கான்கிரீட் உத்தரங்கள் மற்றும் இழுவைக் கம்பிகள் இணைந்த வடிவமைப்பில் கட்டப்பட்டதாகும்.

(i) வடகிழக்கில் இத்தகைய வடிவமைப்பில் கட்டப்பட்ட முதல் பாலம் என்ற சிறப்புக்குரியது. குவாஹாட்டியில் பிரம்மபுத்திரா நதியின் இரு கரை களையும் இணைக்க இதுவரை ஜலுபாரி பகுதியில் மட்டுமே பாலம் இருந்தது. புதிய பாலத்தால் இரு பகுதிகளுக்கான பயண நேரம் 30 நிமிஷங்களில் இருந்து 7 நிமிஷங்களாக குறையும் என்று

அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தப் பால கட்டுமானப் பணிக்கு அவர் கடந்த 2019-இல் அடிக்கல் நாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ii) ஐஐஎம் வளாகம் திறப்பு :-

- குவாஹாட்டியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிலையம் (ஐஐஎம்), காமரூப் மாவட்டத்தின் அமிங்கான் பகுதியில் ரூ.348 கோடி மதிப்பீட்டில் கட்டமைக்கப்பட்ட அதிநவீன தேசிய தரவு மையம் ஆகியவற்றையும் பிரதமர் மோடி திறந்துவைத்தார்.
- குவாஹாட்டி ஐஐஎம், வடகிழக்கில் இரண்டாவது ஐஐஎம் ஆகும்; தேசிய அளவில் 22-ஆவது ஐஐஎம். பிரதமரின் மின் பேருந்து சேவை திட்டத்தின்கீழ் 225 மின் பேருந்துகளையும் அவர் தொடங்கிவைத்தார்